ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අංක 2483 - 2026 අප්‍රේල් 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.04.02
2483 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 594 |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 594 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 596 |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும். இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2026, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன,**
**அரசாங்க அழுத்தகர்.**

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 08,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

593 - B 82777 - 403 (2026/04)

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2026 இன் இல. 000

**நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் இலங்கை நிர்வாக சேவையின் 1 ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தரான திருமதி தில்கி வத்சலா மாரம்பகே அவர்கள், 2026, சனவரி மாதம் 30 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவியில் முழுநேர அடிப்படையில் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ளாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அமைச்சரவையின் கட்டளையின் படி,

ஒப்பம்./ டப்ளியூ. எம். டி. ஜே. பெர்னாண்டோ,
அமைச்சரவைச் செயலாளர்.

2026, மாச்சு மாதம் 24.

04-19

---

# அரசாங்க அறிவித்தல்கள்

## 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க கடன் இணக்கக் கட்டளைச் சட்டம் 25/26 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1941 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க கட்டளைகள் சட்டம் 1959 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்கக் கட்டளைகள் சட்டம் 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கட்டளைகள் சட்டம் 1973 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க கட்டளைகள் சட்டம் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டம் ஆகிய திருத்தம் செய்யப்பட்ட சட்டங்களின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க கடன் இணக்க கட்டளைகள் சட்டத்தின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப இலக்கத்தின் முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள கடனாளி, கடன் உரித்தாளர் ஆகிய இரு தரப்பினர்களுக்கும் இடையில் தீர்வு ஒன்றினை மேற்கொள்வதற்கான முயற்சி ஒன்றினை மேற்கொள்வதற்கு கடன் இணக்க சபை எண்ணியுள்ளது.

இது தொடர்பில் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனாளிகளிடமிருந்து தனக்கு அறவிடப்பட வேண்டிய கடன் தொகைகள் தொடர்பான விபரக் கூற்று ஒன்றினை தமக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ள தினத்திற்கு முன்னர் இந்தச் சபையிடம் முன்வைக்குமாறு உரிய கடன் உரித்தாளர்களுக்கு கட்டளைச் சட்டத்தின் 25(1) 26(1) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

ஒப்பம் : திருமதி. சுபாஷினி தயானந்த,
செயலாளர்,
கடன் இணக்க சபைத் திணைக்களம்.

கடன் இணக்க சபைத் திணைக்களம்,
இல. 35ஏ,
கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை,
கொழும்பு 08.
2026, மாச்சு மாதம் 03 ஆந் திகதி.

| *விண்ணப்ப இலக்கம்* | *கடனாளியின் பெயர் மற்றும் முகவரி* | *கடன் உரித்தாளரின் பெயர் மற்றும் முகவரி* |
|---|---|---|
| (01)<br>46871 | 46871 திருமதி விதானகே தோன நயோமா எரந்தி<br>இல. 237/டீ/1, உடவத்தகொட மாவத்தை,<br>இந்தகஹலந்த, ஒழுங்கை, தொடங்கொட. | கோல்டன் டிரஸ்ட் எட்வரைசஸ் (பிரைவேட்)<br>லிமிட்டெட்,<br>அகலவத்த, பெல்லன, தியனாகொட. |
| (02)<br>46867 | திருமதி கிரீஸ்மலாகே லக்மாலி ஷ்யாமா குமாரி,<br>28சீ, ஹல்கஸ்வத்த, மாஹிங்கொட எஹலியகொட,<br>இரத்தினபுரி.<br>திரு. மடுதூரகே ஆதித்யா தில்மி விஜேதிலக,<br>28டீ, ஹல்கஸ்வத்த, மாஹிங்கொட<br>எஹெலியகொட, இரத்தினபுரி. | திரு. கரவிட்ட தாரனகே குணரத்ன,<br>224/D, குதுவல ரத்ன, ஹங்கமுவ, இரத்தினபுரி. |
| (03)<br>46734 | திருமதி உஸ்வத்த லியனகே,<br>சம்பிகா ஹமந்தி சில்வா,<br>581/A, 10, கணுவ வீதி, மாலம்பே. | திருமதி அமரசிங்க ஆரச்சிகே அனோமா பீரிஸ்,<br>1211/3, ஹோகந்தர வீதி, கொட்டாவ வடக்கு<br>பன்னிப்பிட்டி. |
| (04)<br>46560 | 46560 திரு. ஹபன்பேடிகெதர ரம்யா வங்ஷாவதீ<br>ஜயதிலக,<br>திரு. லியனஆரச்சிலாகே ஹின்னி,<br>(மரணமடைந்துள்ளார்),<br>லியனாராச்சிகே பிரவீன் ரங்கன,<br>274/2/L, மேல் போமிரிய, கடுவெல. | பெரியசாமி மானத்தவேல்,<br>இல 09, அனந்த ராஜகருணா மாவத்தை,<br>கொழும்பு 10. |
| (05)<br>46869 | திரு. அமதோரு துப்பஹிகே,<br>பிரேமகுமார தயானந்த,<br>1862, சந்தன நிவஸ,<br>மொரதவான, எம்பலிப்பிட்டிய. | திரு. வன்னிநாயக்க முதியன்சேலாகே,<br>சமந்த வன்னிநாயக்க,<br>இல. E 5/1116, வைத்தியசாலை வீதி, நவ நகரய,<br>எம்பிலிப்பிட்டி. |
| (06)<br>KU 607 | திருமதி களுவா தேவாலயாகே,<br>லீலா வீரசிங்க,<br>நிஹால் கடே பாரே எஹம்புவ,<br>யடவத்த. | திரு. விக்ரம ஆரச்சிகே நிஹால் அபேவிக்ரம,<br>"சுரேனி மீன்", கடை, கட்டுபிலகொல்ல,<br>தொடம்கஸ்லந்த. |
| (07)<br>GAM 574 | திருமதி மாரசிங்க ஆரச்சிகே தக்சிலா சுபாஷினி<br>மாரசிங்க,<br>திரு. கடுபிட்டி ரன்துனுகே திலங்க நிரோஷன்<br>பெரேரா ,<br>28/A, 001, ரன்சிரி கார்டன், ஹொரகஸ்முல்ல,<br>திவலபிட்டிய. | கெப்பிடல் ரீச் பிரைவட் லிமிட்டெட்,<br>இல. 153/D/3/C, கடவத்த வீதி, கணேமுல்ல. |
| (08)<br>GA 430 | திருமதி வருசு விதான குணசேகர சுஜீவா,<br>197, வேகொன்ன, கட்டெதம்பே, தொடந்துவ. | திருமதி வருசு விதான குணசேகர சமந்தி,<br>வேகொன்ன, கட்டெதம்பே, தொடந்துவ. |
| (09)<br>GAM 355 | திஸாநாயக்க முதியன்சேலாகே,<br>நிரோஷனி திஸாநாயக்க,<br>இல. 418/ஏ, மாகொல வடக்கு,<br>மாகொல. | தொன் சேனக பெரக்கும் காரியப்பெரும,<br>666/10, புதிய கண்டி வீதி, யட்டிஹேன மல்வான,<br>அடகுபிடிப்பவர், ஜீ. எஸ். சரத் ஆனந்த<br>கணேபொல,<br>665, வடுவேகம, மல்வான. |
| (10)<br>45282 | திரு. முணசிங்ஹ இமியாகே,<br>ரத்னசிறி முணசிங்ஹ,<br>93, பல்லே துத்திரிபிட்டிய, அம்பகஸ்பிட்டிய. | திரு. மஹகம்முல்லகே தொன் ஜகத் காமினி,<br>688, ஜீ, கொட்டுன்ன வீதி,<br>ஹெய்யன்துடுவ. |

04-64

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

2024.02.26 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு J M C H ஜயவர்தன அத்தாட்சிப்படுத்திய 2018.11.27ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 293 மற்றும் 294, பிரசித்த நொத்தாரிசு V G G D விதான அத்தாட்சிப்படுத்திய 2021.06.14 ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 163 என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட 1ஆவது தவணைக் கடன் மீது 2026.01.08ஆம் திகதி வரையிலான வட்டியும் முதலுமாக 21,031,153.58 ரூபாயும் (இருபத்தொரு மில்லியன் முப்பத்தோராயிரத்து நூற்று ஐம்பத்துமூன்று ரூபாய் ஐம்பத்தெட்டுச் சதம்) அத்துடன் 2026.01.09ஆம் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பதினான்கு தசம் ஐந்து பூச்சியம் (14.50%) வீதப்படி 10,716,605.77 ரூபாய் (பத்து மில்லியன் எழுநூற்றுப் பதினாறாயிரத்து அறுநூற்று ஐந்து ரூபாய் எழுபத்தேழு சதம்) மீதான மேலதிக வட்டியும்; 2ஆவது தவணைக் கடன் மீது 2026.01.08ஆம் திகதி வரையிலான வட்டியும் முதலுமாக 18,084,193.69 ரூபாயும் (பதினெட்டு மில்லியன் எண்பத்துநான்காயிரத்து நூற்றுத் தொண்ணூற்று மூன்று ரூபாய் அறுபத்தொன்பது சதம்) அத்துடன் 2026.01.09ஆம் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பதினான்கு தசம் ஐந்து பூச்சியம் (14.50%) வீதப்படி 9,876,543.00 ரூபாய் (ஒன்பது மில்லியன் எண்ணூற்று எழுபத்தாறாயிரத்து ஐந்நூற்று நாற்பத்து மூன்று ரூபாய்) மீதான மேலதிக வட்டியும்; 3ஆவது தவணைக் கடன் மீது 2026.01.08ஆம் திகதி வரையிலான வட்டியும் முதலுமாக 19,710,418.81 ரூபாயும் (பத்தொன்பது மில்லியன் எழுநூற்றுப் பத்தாயிரத்து நானூற்றுப் பதினெட்டு ரூபாய் எண்பத்தொரு சதம்) அத்துடன் 2026.01.09ஆம் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பதினான்கு தசம் ஐந்து பூச்சியம் (14.50%) வீதப்படி 10,905,982.91 ரூபாய் (பத்து மில்லியன் தொள்ளாயிரத்து ஐயாயிரத்து தொள்ளாயிரத்து எண்ணூற்றிரெண்டு ரூபாய் தொண்ணூற்றொரு சதம்) மீதான மேலதிக வட்டியும்; இல. 237/28, மொரட்டுவஹேன, அத்துருகிரிய என்ற முகவரியிலுள்ள K S கென்ஸ்ரக்ஷன்ஸ் என்ற நிறுவனத்திடமிருந்து (28/02/A, சீலலங்கார மாவத்தை, முல்லகம, ஹோமாகம என்ற முகவரியைச் சேர்ந்த திரு. தொன் சீமொன் பட்டபெந்தி சமந்த, திரு. தொன் சீமொன் பட்டபெந்தி சசிந்து அஞ்சுல, திருமதி. வல்கம கங்காணமலாகே ரோஹினி ஜயராணி ஆகியோர் இதன் பணிப்பாளர்களாவர்) வங்கிக்கு வருமதியாகவுள்ளது.

2. மேற்படி ஈட்டுமுறி இலக்கங்கள் 293, 294, 163 என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட 1ஆவது தவணைக் கடன் மீது வருமதியாகவுள்ள மேற்குறித்த 21,031,153.58 ரூபாயையும் (இருபத்தொரு மில்லியன் முப்பத்தோராயிரத்து நூற்று ஐம்பத்துமூன்று ரூபாய் ஐம்பத்தெட்டுச் சதம்) 2ஆவது தவணைக் கடன் மீது வருமதியாகவுள்ள மேற்குறித்த 18,084,193.69 ரூபாயையும் (பதினெட்டு மில்லியன் எண்பத்துநான்காயிரத்து நூற்றுத் தொண்ணூற்று மூன்று ரூபாய் அறுபத்தொன்பது சதம்) 3ஆவது தவணைக் கடன் மீது வருமதியாகவுள்ள மேற்குறித்த 19,710,418.81 ரூபாயையும் (பத்தொன்பது மில்லியன் எழுநூற்றுப் பத்தாயிரத்து நானூற்றுப் பதினெட்டு ரூபாய் எண்பத்தொரு சதம்) அத்துடன் 2026.01.09 தொடக்கம் விற்பனைத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட வட்டிகளையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய இங்கு கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரி அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவே ஹேவாவசம் துசித் கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கடுவெல கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

### மேலே கூறப்பட்ட முதலாவது அட்டவணை

'கெலகஹவத்த என அறியப்படும் கெடகெலகஹவத்த' என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் B S அழகக்கோன் தயாரித்த 2004.04.10ஆம் திகதிய வரைபட இல.3512 இல் காணித்துண்டு 3A என அடையாளப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மண், மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை, பள்ளே பற்று, ஹோமாகம பிரதேச செயலகத்தின் ஹோமாகம பிரதேச சபை எல்லைகட்குட்பட்ட 481A, முல்லேகம தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள முல்லேகம பிரதேசத்தில் அமைந்துள்ளது. குறித்த வரைபட இல. 3512இற்கமைய வடக்கில் வரைபட இல.2556 இல் உள்ள காணித்துண்டு 1 மற்றும் 4 கிழக்கில் வீதி (சீலலங்கார மாவத்தை) தெற்கில் பொல்வத்தே அகோனிஸ் அப்புவால் உரிமை கோரப்படும் காணி மேற்கில் எல என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி முப்பத்தொன்பது பேர்ச்சுகள் (A0.R0.P39) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு ஹோமாகம காணிப் பதிவகத்தில் A 929/58 என்ற இலக்கத்தின்கீழ் பதியப்பட்டுள்ளது.

குறித்த காணித்துண்டானது உரிமம் பெற்ற நில அளவையாளர் A B நந்தசிறி தயாரித்த 2021.05.10ஆம் திகதிய அண்மைய வரைபட இல.1762 இல் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

'கெலகஹவத்த என அறியப்படும் கெடகெலகஹவத்த' என்ற காணியின் குறித்த வரைபட இல.1762 இல் காணித்துண்டு A என அடையாளப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேலே குறிப்பிடப்பட்டவாறு முல்லேகம பிரதேசத்தில் அமைந்துள்ளது. குறித்த வரைபட இல. 1762இற்கமைய

வடக்கில் வரைபட இல.2556 இல் உள்ள காணித்துண்டு 1 கிழக்கில் சீலலங்கார மாவத்தை தெற்கில் பொல்வத்தே அகோனிஸ் அப்புவால் உரிமை கோரப்படும் காணி மேற்கில் எல என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி முப்பத்தொன்பது பேர்ச்சுகள் (A0.R0.P39) பரப்பளவைக் கொண்டுள்ளது.

**மேலே கூறப்பட்ட இரண்டாவது அட்டவணை**

'கெலகஹவத்த என அறியப்படும் கெடகெலகஹவத்த' என்ற காணியின் குறித்த வரைபட இல.2556 இல் காணித்துண்டு 4 என அடையாளப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேலே குறிப்பிடப்பட்டவாறு முல்லேகம பிரதேசத்தில் அமைந்துள்ளது. குறித்த வரைபட இல. 2556 இற்கமைய வடக்கில் காணித்துண்டு 2 கிழக்கில் சீலலங்கார மாவத்தை தெற்கில் காணித்துண்டு 3 மேற்கில் காணித்துண்டு 1 என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி மூன்று தசம் ஐந்து பேர்ச்சுகள் (A0.R0.P3.5) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு ஹோமாகம காணிப் பதிவகத்தில் A 929/90 என்ற இலக்கத்தின்கீழ் பதியப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

திருமதி. எல். எல். டீ. ஏ. ராஜபக்ஷ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கடுவெல கிளை.

04-81

---

**இலங்கை வங்கி**

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

2026.01.09 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு டீ. வீரசூரிய அத்தாட்சிப்படுத்திய 2021.08.05ஆம் திகதிய ஈட்டுமுறி இல.4059இன்பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட 25,500,000.00 ரூபாய் (இருபத்தைந்து மில்லியன் ஐந்நூறாயிரம் ரூபாய்) இலங்கை வங்கி வீட்டுக் கடன் மீது 2025.12.11ஆம் திகதி வரையிலான வட்டியும் முதலுமாக 27,068,762.69 ரூபாயும் (இருபத்தேழு மில்லியன் அறுபத்தெட்டாயிரத்து எழுநூற்று அறுபத்திரெண்டு ரூபாய் அறுபத்தொன்பது சதம்) அத்துடன் 2025.12.12ஆம் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பத்து (10%) வீதப்படி 24,601,175.57 ரூபாய் (இருபத்து நான்கு மில்லியன் அறுநூற்று ஓராயிரத்து நூற்று எழுபத்தைந்து ரூபாய் ஐம்பத்தேழு சதம்) இலங்கை வங்கி வீட்டுக் கடன் முதல் நிலுவை மீதான மேலதிக வட்டியும் இல. 113/4, பாகொட வீதி, நுகேகொட என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி. புபுதிதா மனுரங்கி அபயசிங்க மற்றும் திரு. நெரங்க இஷான் அபயசிங்க ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட ஈட்டுமுறி இல. 4059இன் பேரில் வருமதியாகவுள்ள இலங்கை வங்கி வீட்டுக் கடன் மீதான மேற்குறித்த 27,068,762.69 ரூபாயையும் (இருபத்தேழு மில்லியன் அறுபத்தெட்டாயிரத்து எழுநூற்று அறுபத்திரெண்டு ரூபாய் அறுபத்தொன்பது சதம்) அத்துடன் 2025.12.12 தொடக்கம் விற்பனைத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய இங்கு கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரி அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி புறக்கோட்டை வியாபார மையத்தின் சிரேஷ்ட முகாமையாளருக்கும் (அறவிடல்) இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேலே கூறப்பட்ட முதலாவது அட்டவணை**

'கொஸ்கஹகுருந்துவத்தை' என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் D.N. டி சில்வா தயாரித்த 2021.01.21ஆம் திகதிய வரைபட இல. 0320இல் காணித்துண்டு 2 என அடையாளப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி தற்போது இல. 113/4 மற்றும் 113/4 1/1 பாகொட வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று, ஸ்ரீ ஜயவர்தனபுரக் கோட்டை மாநகர சபை மற்றும் பிரதேச செயலக எல்லைகட்குட்பட்ட 519/A, பாகொட கிராம அலுவலர் பிரிவில் உள்ள பாகொட கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் வரைபட இல. 2493இல் உள்ள காணித்துண்டு 2B2இன் மீதிப் பாகம் (இல. 113/5 பாகொட வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட கட்டடம்) கிழக்கில் பாதை (வரைபட இல. 2493இல் உள்ள காணித்துண்டு 2B3) தெற்கில் வரைபட இல. 1283இல் உள்ள காணித்துண்டு 1 மேற்கில் W.A. கோர்னெலிஸ் அப்புஹாமியின் வாரிசுகளுக்குச் சொந்தமான ஆதனம் என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி பதினான்கு தசம் இரண்டு ஆறு பேர்ச்சுகள் (A0.R0.P14.26) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் மூன்று ஆறு ஒன்று (0.0361) ஹெக்டேயர் பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளது.

காணித்துண்டு 2 என அடையாளப்படுத்தப்பட்ட குறித்த காணித்துண்டானது கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும்.

'கொஸ்கஹகுருந்துவத்தை' என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் D.A.F யாப்பா தயாரித்த 1983.03.15ஆம் திகதிய வரைபட இல. 1283இல் காணித்துண்டு 2 என அடையாளப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி தற்போது இல. 113/4, பாகொட வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் மேற்குறித்தவாறு பாகொட கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் வரைபட இல. 2493இல் உள்ள காணித்துண்டு 2B2இன் மீதிப் பாகம் கிழக்கில் வரைபட இல. 2493இல் உள்ள காணித்துண்டு 2B3 தெற்கில் வரைபட இல. 1283இல் உள்ள காணித்துண்டு 1 மேற்கில் W.A. கோர்னெலிஸ் அப்புஹாமியின் வாரிசுகளுக்குச் சொந்தமான ஆதனம் என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி பதினைந்து தசம் ஐந்து பேர்ச்சுகள் (A0.R0.P15.5) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளதோடு தெல்கந்த காணிப்பதிவகத்தில் A 540/23 என்ற இலக்கத்தின்கீழ் பதியப்பட்டுள்ளது.

**மேலே கூறப்பட்ட இரண்டாவது அட்டவணை**

**1.** 'கொஸ்கஹகுருந்துவத்தை' என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் வி. சிவசுந்தரம் தயாரித்த 1959.03.20ஆம் திகதிய வரைபட இல. 380இல் காணித்துண்டு 2D என அடையாளப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி காணித்துண்டு 2C இன் கிழக்கெல்லையாகவும் பாதை ஒதுக்கமாகவும் விளங்குவதோடு மேற்குறித்தவாறு பாகொட கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் காணித்துண்டு 2A கிழக்கில் வரைபட இல. 988இல் உள்ள காணித்துண்டுகள் 6 மற்றும் 7 தெற்கில் பாகொட வீதி மற்றும் காணித்துண்டு 7 மேற்கில் காணித்துண்டுகள் 2B மற்றும் 2C என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி மூன்று தசம் ஏழு பூச்சியம் (A0.R0.P3.70) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளதோடு தெல்கந்த காணிப்பதிவகத்தில் M 1781/145 என்ற இலக்கத்தின்கீழ் பதியப்பட்டுள்ளது.

**2.** 'கொஸ்கஹகுருந்துவத்தை' என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் A.F. சமீர் தயாரித்த 1980.01.01ஆம் திகதிய வரைபட இல. 2266இல் காணித்துண்டு 2C4 (வி. சிவசுந்தரம் தயாரித்த 1959.03.20ஆம் திகதிய வரைபட இல. 380இல் இல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2Cஇன் உப பிரிவு) என அடையாளப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேற்குறித்தவாறு பாகொட கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் காணித்துண்டு 2C3 கிழக்கில் பாதை தெற்கில் பாகொட வீதி மேற்கில் காணித்துண்டு 2C2 என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி இரண்டு தசம் ஒன்று பூச்சியம் (A0.R0.P2.10) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு தெல்கந்த காணிப்பதிவகத்தில் M 1724/212 என்ற இலக்கத்தின்கீழ் பதியப்பட்டுள்ளது.

**3.** 'கொஸ்கஹகுருந்துவத்தை' என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் A.F. சமீர் தயாரித்த 1981.08.15ஆம் திகதிய வரைபட இல. 2493இல் காணித்துண்டு C3B என அடையாளப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேற்குறித்தவாறு பாகொட கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் காணித்துண்டு 2B3 கிழக்கில் காணித்துண்டு 2D தெற்கில் காணித்துண்டு 2C4 மேற்கில் காணித்துண்டு C3A என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஒன்று தசம் பூச்சியம் (A0. R0.P1.0) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு தெல்கந்த காணிப்பதிவகத்தில் M 1781/210 என்ற இலக்கத்தின்கீழ் பதியப்பட்டுள்ளது.

**4.** 'கொஸ்கஹகுருந்துவத்தை' என்ற காணியின் வரைபட இல. 2493இல் காணித்துண்டு 2B3 என அடையாளப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேற்குறித்தவாறு பாகொட கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் ஏ. ஜயதிலக்க மற்றும் வயலற் பீரிஸ் ஆகியோரால் உரிமை கோரப்படும் காணி கிழக்கில் காணித்துண்டுகள் 2B4 மற்றும் 2D தெற்கில் காணித்துண்டு C3B மேற்கில் காணித்துண்டுகள் 2B1 மற்றும் 2B2 என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஆறு தசம் ஐந்து பூச்சியம் (A0.R0.P6.50) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு தெல்கந்த காணிப்பதிவகத்தில் M 1781/211 என்ற இலக்கத்தின்கீழ் பதியப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

WMHASSB ஏக்கநாயக்க,
சிரேஷ்ட முகாமையாளர் (அறவிடல்).

இலங்கை வங்கி,
புறக்கோட்டை வியாபார மையம்.

04-100

---

## இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டம், 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டு 54ஆம் இலக்கச் சட்டம் என்பவற்றினால் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397ஆம் அத்தியாயம்) 21ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2026.03.18ஆம் திகதியன்று இடம்பெற்ற கூட்டத்தில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை பிரத்தியேகமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

பிரசித்த நொத்தாரிசு கே.ஏ.பி.யு ரூபசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2024.06.04ஆந் திகதியிட்ட 30ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொண்ட கடன் வசதியின் மீது ஆந் 2026.01.27திகதி வரையான வட்டியும் முதலுமாக 11,024,938.80 ரூபாயும் (பதினொரு மில்லியன் இருபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தெட்டு ரூபாய் எண்பது சதம்) 2026.01.28 திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை 8,818,021.50 (எட்டு மில்லியன் எண்ணூற்றுப் பதினெட்டாயிரத்து இருபத்தொரு ரூபாய் ஐம்பது சதம்) ரூபாய் முதல் நிலுவை மீது ஆண்டுக்கு பதினாறு தசம் ஐந்து பூச்சியம் (16.50%) என்ற வீதத்திலான மேலதிக வட்டியும் இலக்கம் 119W, பதிலியாதுடுவ வீதி, ஹுனுபிட்டிய, வத்தளை எனும் முகவரியைச் சேர்ந்த செல்வி. காரியவஸம் ஹப்புதந்திரிகே பிரதீபா சமரசிங்ஹ என்பவரிடமிருந்து வங்கிக்கு நிலுவையாக உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு கே.ஏ.பி.யு. ரூபசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2024.06.04ஆந் திகதியிட்ட 30ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் நிலுவையாகவுள்ள 11,024,938.80 ரூபாயையும் (பதினொரு மில்லியன் இருபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தெட்டு ரூபாய் எண்பது சதம்) அத்துடன் 2026.01.28ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையிலான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய கீழுள்ள அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தின் குத்தகை உரிமையை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3 விஹார மாவத்தை கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரி அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.எம்.எச்.ரி.கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவிற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கிராண்ட்பாஸ் கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

30 ஆம் இலக்க அடமான முறியிலுள்ள மேற்குறிப்பிட்ட அட்டவணை குறிப்பிடுவது

உரிமம் பெற்ற நில அளவையாளர் சி.எஸ்.லியனகே தயாரித்த 2023.07.29ஆந் திகதியிட்ட (ஆனால் 29.08.2023இல் பதிவு செய்யப்பட்ட) 2023/30ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டு, பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட “கொஸ்கஹவத்தை” என்ற காணியின் காணித்துண்டு 2 மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியானே கோரளையின் அதிகாரி பத்துவில், களனி பிரதேச சபை மற்றும் களனி பிரதேச செயலக எல்லைகளுள், இல.261, வெடமுல கிராம சேவையாளர் பிரிவில், வரகொட எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. இக்காணி வடக்கில் காணித்துண்டு 1இனையும் கிழக்கில் கல்தொட்ட பிரதேசத்தினையும் தெற்கில் கல்தொட்ட பிரதேசத்தினையும் மேற்கில் எம்.ஏ. விஜேசூரியவின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணி அங்குள்ள மண், மரங்கள், தோட்டங்கள் கட்டடங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கி உரிமம் பெற்ற நில அளவையாளர் சி.எஸ். லியனகே தயாரித்த 2023.07.29ஆந் திகதியிட்ட 2023/30ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பத்து பேச்சுகள் (ஏ0.ரூ0.பே10) பரப்பளவுடன், G408/90 எனும் இலக்கத்தின் கீழ் மஹர காணிப்பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு 2 உரிமம் பெற்ற நில அளவையாளர் வி. காமினி வித்தான தயாரித்த 2023.03.18ஆந் திகதியிட்ட 2023/382ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு Y/1 இன் மீளளவையும் உபபிரிவுமாகும் என்பதுடன், இது 8997ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுY இன் மீளளவையாகும்.

உரிமம் பெற்ற நில அளவையாளர் சாலிய விக்கிரமசிங்ஹ தயாரித்த (ஆனால் சமரவிக்கிரம எனப் பதியப்பட்டுள்ளது) 2006.05.22ஆந் திகதியிட்ட 8997ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டு, பிரிக்கப்பட்டு எல்லை நிர்ணயிக்கப்பட்ட “கொஸ்கஹவத்தை” என்ற காணியின் காணித்துண்டுY அங்குள்ள மண், மரங்கள், தோட்டங்கள் கட்டடங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கி மேற்குறிப்பிட்டவாறு வரகொட எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டுY வடக்கில் இதன் காணித்துண்டு X இனையும் கிழக்கில் கல்தொட்ட பிரதேசத்தினையும் தெற்கில் கல்தொட்ட பிரதேசத்தினையும் மேற்கில் எம்.ஏ. விஜேசூரியவின் காணியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டுY பதினாறு தசம் ஐந்து பூச்சியம் பேச்சுகள் (ஏ0.ரூ0.பே16.50) பரப்பளவுடன் 8997ஆம் இலக்க வரைபடத்தின்படி C694/33 எனும் இலக்கத்தின் கீழ் மஹர காணிப்பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

திருமதி.எம்.சிறிதரன்,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கிராண்ட்பாஸ் கிளை.

04-98

---

**இலங்கை வங்கி**

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

2026.02.26 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு WASC மத்தியூ அத்தாட்சிப்படுத்திய 2006.02.09ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 4437, பிரசித்த நொத்தாரிசு EKHMK கருணாதிலக்க அத்தாட்சிப்படுத்திய 2007.07.13ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 526, 2011.08.05 ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 2131, 2013.10.29 ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 3558 என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட நிரந்தர மேலதிகப் பற்று வசதி மீது 2026.01.07ஆம் திகதி வரையிலான வட்டியும் முதலுமாக 19,167,243.07 ரூபாயும் (பத்தொன்பது மில்லியன் நூற்று அறுபத்தேழாயிரத்து இருநூற்று நாற்பத்துமூன்று ரூபாய்

ஏழு சதம்) அத்துடன் 2026.01.08ஆம் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பதினைந்து தசம் ஐந்து பூச்சியம் (15.50%) வீதப்படி 10,000,000.00 ரூபாய் (பத்து மில்லியன் மூன்று ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் இல. 102/17, பரலல் வீதி, மொல்லிகொட, வாத்துவ என்ற முகவரியைச் சேர்ந்த ஸ்ரான்லி நிசங்க சில்வா எனவும் அறியப்படும் திரு. நிசங்க ஸ்ரான்லி சில்வா என்பவரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட ஈட்டுமுறி இலக்கங்கள் 4437, 526, 2131, 3558 என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட நிரந்தர மேலதிகப் பற்று வசதி மீது வருமதியாகவுள்ள மேற்குறித்த 19,167,243.07 ரூபாயையும் (பத்தொன்பது மில்லியன் நூற்று அறுபத்தேழாயிரத்து இருநூற்று நாற்பத்துமூன்று ரூபாய் ஏழு சதம்) அத்துடன் 2026.01.08 தொடக்கம் விற்பனைத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட வட்டிகளையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய இங்கு கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரி அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவே ஹேவாவசம் துசித் கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி வாத்துவ கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

### மேலே கூறப்பட்ட அட்டவணை

'மூடில்லகஹவத்த' என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் AMR ஜயசேகர தயாரித்த 2004.07.03ஆம் திகதிய வரைபட இல.4024 இல் காணித்துண்டு A என அடையாளப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மண், மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தோட்டமுனை, வாத்து வஸ்கடு தெபத்த, பாணந்துறை பிரதேச செயலகத்தின் பாணந்துறை பிரதேச சபை எல்லைகட்குட்பட்ட 704, மொல்லிகொட கிராம அலுவலர் பிரிவில் உள்ள மொல்லிகொட பிரதேசத்தில் அமைந்துள்ளது. குறித்த வரைபட இல.4024இற்கமைய வடக்கில் வரைபட இல.526 இல் உள்ள காணித்துண்டு 5 (3 அடிப் பாதை) (அல்விஸ்வலவ்வேவத்த எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது), ரி.ஆர்.பெனான்டோ மற்றும் பிறரின் காணி கிழக்கில் தற்போதுள்ள வீதி, ஆர்.எம். டி சில்வா மற்றும் பிறரின் காணி, ரி.ஆர்.பெனான்டோ மற்றும் பிறரின் காணி தெற்கில் விவேக்கா பீச் றிசொட் வளாகம் மேற்கில் கடற்கரை என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி மூன்று றூட்கள் (A0.R3.P0) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு பாணந்துறை காணிப் பதிவகத்தில் D 94/19 என்ற இலக்கத்தின்கீழ் பதியப்பட்டுள்ளது.

### மேலே கூறப்பட்ட இரண்டாவது அட்டவணை

'மூடில்லகஹவத்த' என்ற காணியின் 1979.08.08ஆம் திகதிய வரைபட இல.525இல் காணித்துண்டு 5 என அடையாளப்படுத்தப்பட்டு விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மொல்லிகொட பிரதேசத்தில் அமைந்துள்ளது. குறித்த வரைபட இல.525இற்கமைய வடக்கில் அல்விஸ்வத்தை கிழக்கில் பாதை (8 அடி அகலமான பாதைக்கான ஒதுக்கம்) தெற்கில் காணித்துண்டுகள் 4, 3, 2, 1 மேற்கில் கடற்கரை என்பவற்றை எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி நான்கு தசம் ஏழு ஐந்து பேர்ச்சுகள் (A0.R0.P4.75) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு பாணந்துறை காணிப் பதிவகத்தில் D 94/20 என்ற இலக்கத்தின்கீழ் பதியப்பட்டுள்ளது.

மேலும், குறித்த வரைபட இல.4024 இல் விபரிக்கப்பட்டுள்ள பிரதான வீதிக்குச் செல்லும் தற்போதுள்ள பாதை மீதான வழியுரிமையையும் இக்காணி கொண்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

திரு. WATD விஜேசூரிய,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
வாத்துவ கிளை.

04-94

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டு 01 மற்றும் இல. 19 இனால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

நில்திய டிஸ்ட்றிபியூட்டார்ஸ்
கணக்கு இல. 0006 1001 1993

2026.02.19 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

PQ 144 எனும் கம்பனி பதிவு இலக்கத்தைக் கொண்ட கொழும்பு 02, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக குருநாகல் பிரசித்த நொத்தாரிசுவான ரீ. குணதிலக்க என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2021, யூலை 09 ஆந் திகதியிடப்பட்ட இல. 2782, 2018, மாச்சு 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 1398, 2017, செத்தெம்பர் 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 1128, 2016, பெப்புருவரி 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 401, ஈ. எம். என். டீ. திஸாநாயக்க என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்படட 2015, சனவரி 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 1488 மற்றும் 2015, மே 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 1656 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெயர் மற்றும் வடிவில் "நில்திய டிஸ்ட்றிபியூட்டார்ஸ்" எனும் வியாபாரத்தை பங்காளர்களாக நடாத்தி வரும் கடமைப்பட்டார் எனும் வகையில் ஹிட்டிஹாமி முதியன்சேலாகே ரோஹன

பியசிரி சேனாநாயக்க மற்றும் கல்யானி சுபத்ரா குமாரி மெணிக்கா பதுகே என்பவர்களில் அடகு வைத்தவர் எனும் வகையில் ஹிட்டிஹாமி முதியன்சேலாகே ரோஹன பியசிரி சேனாநாயக்க என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இலக்கங்கள் 2782, 1398, 1128, 401, 1488 மற்றும் 1656 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் எண்பத்து நான்கு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து நானூற்று இருபத்து எட்டு ரூபா அறுபது சதம் (ரூபா 8,412,428.60) 2026, பெப்புருவரி 01 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட எண்பத்து நான்கு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து நானூற்று இருபத்து எட்டு ரூபா அறுபது சதம் (ரூபா 8,412,428.60) 2026, பெப்புருவரி 02 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 2782, 1398, 1128, 401, 1488 மற்றும் 1656 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எழுபத்து நான்கு இலட்சத்து பதின் மூவாயிரத்து நானூற்று நாற்பது ரூபா (ரூபா 7,413,440.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஐந்து தசம் நான்கு ஐந்து வீதம் (15.45%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 2782, 1398, 1128, 401, 1488 மற்றும் 1656 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம் வேஉட வில்லி ஹத்பத்து தீரகந்தாஹய கோரளேயின் குருநாகல் பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவின் வில்கொட - இல. 811 எனும் (மிகத்திருத்தமாக) கிராம சேவகர் பிரிவின் வில்கொட கிராமத்தில் அமைந்த "படஹெலயாஹேன தற்போது வத்த வெலிமெட்டிகன்னாவளேஹேன தற்போது வத்த, வளவ்வெ வத்த மற்றும் கோன்காஹாமுலவத்த தற்போது ஃபிஸ்கால்வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. பி. திஸாநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998, ஓகத்து 27 ஆந் திகதியிடப்பட்ட (2014, மாச்சு 28 ஆந் திகதி உப பிரிவாக்கப்பட்ட) இல. 2301 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2A என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: ஆர். எம். பியசேன மற்றும் ஏனையோரின் வயல் வெளி, ஆர். எம். அப்புஹாமியின் வாரிசுகளின் வயல் வெளி ஆனால் மிகத்திருத்தமாக ஆர். எம். பியசேன மற்றும் ஏனையோரின் வயல் வெளி, ஆர். எம். அப்புஹாமியின் வாரிசுகளின் வயல் வெளி மற்றும் திரு பள்ளேகம என்பவரின் வாரிசுகளின் வயல் வெளி; கிழக்கு: கூறப்பட்ட இல. 2301 எனும் வரைப்படத்தின் லொட் 03; தெற்கு: கனுடாவத்த முதல் பிரதான வீதி வரையான பிரதேச சபை வீதி மற்றும் இல. 2301 எனும் வரைபடத்தின் லொட் 2B மற்றும் மேற்கு: கூறப்பட்ட இல. 2301 எனும் வரைப்படத்தின் லொட் 1B ஆனால் மிகத் திருத்தமாக இல. 2301 எனும் வரைப்படத்தின் லொட் 01 மற்றும் இல. 2301 எனும் வரைபடத்தின் லொட் 2B, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட் பதின் ஒன்று தசம் இரண்டு பேர்ச் (00ஏ. 02றூ. 11.2பே) அல்லது ஹெக். 0.2307 விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2301 எனும் வரைப்படத்திற்கு அமைவாக குருநாகல் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் G 227/113 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

04-48

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டு 01 மற்றும் இல. 19 இனால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

டப்ளியூ. ஏ. டீ. விக்ரமசேக்கர மற்றும் ஏ. ஏ. எஸ். எஸ். ஜயவர்தன
கணக்கு இல. 1198 5212 4714/ 0198 5000 5381

2026.02.19 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

PQ 144 எனும் கம்பனி பதிவு இலக்கத்தைக் கொண்ட கொழும்பு 02, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கம்பஹா பிரசித்த நொத்தாரிசுவான ஏ. டப்ளியூ. டீ. எம். வித்தானகே என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2020, நவெம்பர் 27 மற்றும் 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 4410, கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான கே. எல். ஐ. பிரியதர்ஷனி என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2025, மே 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 106 மற்றும் 2025, யூன் 19 ஆந் திகதியிடப்பட்ட இல. 139 எனும் இரு ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் எனும் வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விக்ரமசேக்கர ஆரச்சிலாகே தனுக விக்கரமசேக்கர மற்றும் அத்தாவுத ஆரச்சிகே ஷசிகா செவ்வந்தி ஜயவர்தன என்பவர்களில் அடகு வைத்தவர் எனும் வகையில் கூறப்பட்ட

அத்தாவுத ஆரச்சிகே ஷசிகா செவ்வந்தி ஜயவர்தன என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், இலக்கங்கள் 4410, 106 மற்றும் 139 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் ஒரு கோடியே அறுபத்து ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து எழுநூற்று முப்பத்து ஏழு ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூபா 16,993,737.92) 2026, பெப்புருவரி 01 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட ஒரு கோடியே அறுபத்து ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து எழுநூற்று முப்பத்து ஏழு ரூபா தொண்ணூற்று இரண்டு சதம் (ரூபா 16,993,737.92) 2026, பெப்புருவரி 02 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 4410, 106 மற்றும் 139 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பத்து ஒரு இலட்சத்து பத்தொன்பதினாயிரத்து எண்ணூற்று எழுபத்து ஒரு ரூபா தொண்ணூற்று ஏழு சதம் (ரூபா 5,119,871.97) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் நான்கு தசம் சைபர் வீதம் (14.0%) மேலும் ஒரு கோடியே ஏழு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து அறுநூற்று எழுபத்து நான்கு ரூபா எழுபத்து மூன்று சதம் (ரூபா 10,754,674.73) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு மூன்று தசம் சைபர் வீதம் (AWPLR + 3.0%) P.a. வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 4410, 106 மற்றும் 139 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான எம். எச். ரீ. கருணாரத்ன என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், ஹப்பிட்டிகம் கோரளே யட்டிகாஹா பத்து திவுலபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் கொட்டதெனியாவ - 54B கிராம அலுவலர் பிரிவின் கொட்டதெனியாவ கிராமத்தில் அமைந்த "பார்ச்சிங்டன் எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். எஸ். கே. ஹேரத் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, மே 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 4392 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: லொட் 82 (வீதி) மற்றும் இதே காணிகளின் லொட் இலக்கங்கள் 29 மற்றும் 27; கிழக்கு: இதே காணிகளின் லொட் இலக்கங்கள் 29, 27 மற்றும் 32; தெற்கு: இதே காணியின் லொட் 32 மற்றும் லொட் 81 (வீதி) மற்றும் மேற்கு: லொட் இலக்கங்கள் 81 (வீதி) மற்றும் 82 (வீதி), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்து ஆறு தசம் எட்டு பேர்ச் (00ஏ. 00றூ. 26.8பே) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4392 எனும் வரைப்படத்திற்கு அமைவாக நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் J 171/124 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல. 4280 எனும் வரைப்படத்தின் லொட் இலக்கங்கள் 81, 82, 84, 86 மற்றும் 83 மற்றும் இல. 469 எனும் வரைப்படத்தின் லொட் 2 இவற்றின் மீதும் அதன் ஊடாகவும் அதன் கீழும் பயணிப்பதற்கும் மற்றும் அதனுடன் இணைந்த ஏனைய உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

04-45

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டு 01 மற்றும் இல. 19 இனால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

ஏ. பீ. கோவின்ன
கணக்கு இல. 0060 5001 7158

2026.02.19 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

PQ 144 எனும் கம்பனி பதிவு இலக்கத்தைக் கொண்ட கொழும்பு 02, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கம்பஹா பிரசித்த நொத்தாரிசுவான ஏ. டப்ளியூ. டீ. எம். வித்தானகே என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2021, பெப்புருவரி 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 4507 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கடமைப்பட்டுள்ளார் எனும் வகையில் கடன்பட்ட அமில பிரசாத் கோவின்ன என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், இல. 4507 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் எண்பத்து ஒன்பது இலட்சத்து எழுபத்து ஏழாயிரத்து அறுநூற்று எண்பத்து மூன்று ரூபா ஒன்பது சதம் (ரூபா 8,977,683.09) 2026, பெப்புருவரி 01 ஆந் திகதி

சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட எண்பத்து ஒன்பது இலட்சத்து எழுபத்து ஏழாயிரத்து அறுநூற்று எண்பத்து மூன்று ரூபா ஒன்பது சதம் (ரூபா 8,977,683.09) 2026, பெப்புருவரி 02 ஆந் திகதி முதல் இல. 4507 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எண்பத்து ஐந்து இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து இருநூற்று நாற்பத்து நான்கு ரூபா பன்னிரெண்டு சதம் (ரூபா 8,537,244.12) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு எட்டு தசம் சைபர் வீதம் (8.0%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 4507 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளே பல்லே பத்துவின் கடுவெல மா நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் ஷாந்தாலோக்ககம கிராம அலுவலர் பிரிவின் கொரதொட்ட கிராமத்தில் அமைந்த 6 ஆவது ஒழுங்கை, எம். டீ. எச். ஜயவர்தன மாவத்தை, வரிமதிப்பீட்டு இல. 26 ஐ ஏற்ற "வனபொத்து மூக்கலான எனும் வைவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டப்ளியூ. தெபுலன்கொட என்பவரால் தயாரிக்கப்பட்ட 2000, ஓகத்து 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 1259 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 57A என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: 20 அடிகள் அகல வீதி; கிழக்கு: P.P. fld. 7083 எனும் வரைப்படத்தின் லொட் 56; தெற்கு: லொட் 57B மற்றும் மேற்கு: இல. லொட் 57E, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து தசம் இரண்டு சைபர் பேர்ச் (00ஏ. 00றூ. 10.20பே) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1259 எனும் வரைப்படத்திற்கு அமைவாக ஹோமாகமை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் B 594/105 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இங்கு உப அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்ட இல. 904 எனும் வரைப்படத்தில் காட்டப்பட்ட லொட் 58B (7 அடிகள் அகல வீதி) மீதும் அதன் ஊடாகவும் அதன் கீழும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
கம்பனிச் செயலாளர்.

04-44

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டு 01 மற்றும் இல. 19 இனால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்.

தர்ஷன இன்ஜினியார்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
கணக்கு இல. 0105 1000 1082

2025.11.12 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

PQ 144 எனும் கம்பனி பதிவு இலக்கத்தைக் கொண்ட கொழும்பு 02, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கண்டி பிரசித்த நொத்தாரிசுவான ஜே. சீ. ஆர். ரண்கம என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, செத்தெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இலக்கங்கள் 2038 மற்றும் 2042 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டார் எனும் வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பனி சட்டங்களுக்கு அமைவாக நேர்த்தியாக கூட்டிணைக்கப்பட்டு இல. PV 66150 எனும் பதிவு இலக்கத்தை கொண்ட "தர்ஷன இன்ஜினியார்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" மற்றும் அடகுதாரர் என்ற வகையில் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால்,

PQ 144 எனும் கம்பனி பதிவு இலக்கத்தைக் கொண்ட கொழும்பு 02, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கண்டி பிரசித்த நொத்தாரிசுவான ஜே. சீ. ஆர். ரண்கம என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, செத்தெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 2036 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டார் எனும் வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பனி சட்டங்களுக்கு அமைவாக நேர்த்தியாக கூட்டிணைக்கப்பட்டு இல. PV 66150 எனும் பதிவு இலக்கத்தை கொண்ட "தர்ஷன இன்ஜினியார்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கம்பனி சட்டங்களுக்கு அமைவாக நேர்த்தியாக கூட்டிணைக்கப்பட்டு இல. PV 66149 எனும் பதிவு இலக்கத்தை கொண்ட "டெக்ஸ்ரீ எண்டட்டபிரைசார்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்" அடகுதாரர் எனும் வகையில் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால்,

கூறப்பட்ட இலக்கங்கள் 2038, 2042 மற்றும் 2036 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் நான்கு கோடியே நாற்பது இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து ஏழு ரூபா தொண்ணூற்று ஐந்து சதம் (ரூபா

44,044,007.95) 2025, செத்தெம்பர் 28 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட நான்கு கோடியே நாற்பது இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து ஏழு ரூபா தொண்ணூற்று ஐந்து சதம் (ரூபா 44,044,007.95) 2025, செத்தெம்பர் 29 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 2038, 2042 மற்றும் 2036 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே தொண்ணூறு இலட்சத்து அறுபத்து ஒன்பதினாயிரத்து எண்ணூற்று நாற்பத்து ஆறு ரூபா ஐம்பத்து ஆறு சதம் (ரூபா 19,069,846.56) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் மூன்று வீதம் (13%) மேலும் ஒரு கோடியே இருபத்து ஒரு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது ரூபா முப்பத்து எட்டு சதம் (ரூபா 12,119,960.38) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் மூன்று வீதம் (13%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 2038, 2042 மற்றும் 2036 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான என். யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

